**செய்தி வெளியீடு எண்: 094** **நாள்: 04.02.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

# தமிழ்நாடு அரசு, சாலைப் பாதுகாப்பு ஆணையர்/ போக்குவரத்து ஆணையர் அலுவலகம் சேப்பாக்கம், சென்னை 5.

30வது சாலைப் பாதுகாப்பு வார விழா 04.02.2019 முதல் 10.02.2019 வரை அனுசரிக்கப்படுகிறது. அதன் தொடக்க நாளான இன்று 04.02.2019 சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையிலிருந்து விழிப்புணர்வு பேரணி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்தின்றி வாகனங்கள் இயக்குதல் தொடர்பாக உரை நிகழ்த்தினார். பின்னர் பேரணி சேப்பாக்கத்திலிருந்து புறப்பட்டு தீவுத்திடல் வரை சென்றடைந்தது. இந்த பேரணியில் போக்குவரத்து ஆணையர்/சாலைப் பாதுகாப்பு ஆணையர் திரு.சி. சமயமூர்த்தி இ.ஆ.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு.கரண்சின்கா, இ.கா.ப., மற்றும் திரு. தி.நகர் சத்யா. சட்டமன்ற உறுப்பினர்ஆகியோர் பங்கேற்றனர். இந்த பேரணியானது பொதுமக்களுக்கு தலைக்கவசத்தின் முக்கியத்துவம் பற்றியும், சீட் பெல்ட்டின் முக்கியத்துவம் பற்றியும் மற்றும் விபத்தில்லாமல் சாலையில் பயணிக்கும் வண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ‘சாலை பாதுகாப்பு மன்றம்’ உருவாக்கப்பட்டு மாணவ பருவத்திலிருந்தே சுய ஒழுக்க கட்டுப்பாட்டுடன் சாலை விதிகளை மதித்து விபத்தில்லாமல் சாலையை பயன்படுத்துவதும் எதிர்காலத்தில் பாதுகாப்பாக வாகனத்தை இயக்குவது குறித்தும் பள்ளி மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தபட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110ன் கீழ் சட்டப் பேரவையில் அறிவித்ததன் பேரில் செங்கல்பட்டு முதல் திருச்சி வரையில் தேசிய நெடுஞ்சாலையில் அதிக விபத்துக்கள் நடக்கும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தானியங்கி பதிவெண் பலகை படம் பிடிக்கும் கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் அதிக வேகமாக செல்லும் வாகனங்களை அடையாளம் கண்டு அதன் மீது நடவடிக்கை எடுத்து விபத்தினை குறைக்க ஏதுவாக அமையும். மேலும் இவ்வாரத்தில் தமிழகத்தில் வாகன விபத்தில்லா மாநிலமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து சாலைப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படும். சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சிறப்பு வாகனத் தணிக்கை ஆகியவை கடைபிடிக்கப்படும்

.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**